## 2 Annex "B" - Constitution

### அமைப்பு விதிகள் (யாப்பு)

1. கட்சியின் பெயர்:

**ஈரோஸ் ஜனநாயக முன்னணி**

(அ) இவ் அரசியல் கட்சியின் பெயர் **'ஈரோஸ் ஜனநாயக முன்னணி'** ஆகும்.
இது ஆங்கிலத்தில்: **'EROS Democratic Front'** எனவும்
சிங்களத்தில்: **'EROS Prajathandravathi Peramuna'** எனவும் அழைக்கப்படும்.

(ஆ) இக்கட்சியின் விலாசம்:

இல:15, வன்னியார் வீதிஇ கல்முனை.

2. இலச்சினை:
ஏர், நங்கூரம், தேயிலைக் கொழுந்து
ஆகியவற்றைச் சுற்றி கைத்தொழிலைப்
பிரதிபலிக்கும் சக்கரம் அமைந்திருக்கும்.

3. கொடி
சிவப்பு நிறக் கொடியில் இலட்சினையும் கட்சிப் பெயரும் மஞ்சள் நிறத்தில் அமைந்திருக்கும்.

4. தேர்தல் சின்னம்

5. அடிப்படைக் கோட்பாடு

இலங்கையின் அனைத்து சமூகங்களிடையேயும் ஐக்கியத்தை உருவாக்கக்கூடிய மக்கள் ஜனநாயகமே கட்சியின் அடிப்படைக் கோட்பாடாகும்.

6. இலக்குகள்

(அ) வர்க்கம், தேசியம், இனம், சமயம், சாதி, குலம், பால் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்ட பாகுபாடுகளையும், அடக்குமுறைகளையும், ஒடுக்குமுறைகளையும் நீக்குதல்.

(ஆ) ஜனநாயக வழிமுறையில் அமைக்கப்படும் இனங்களுக்கான சுயாட்சியே இன முரண்பாடு நீக்கியாகவும் ஐக்கியத்தின் அளவு கோலாகவும் இருக்கும் என்பதை கருத்திற்கொண்டு இனங்களின் சுயநிர்ணய உரிமையை உறுதி செய்தல். குறிப்பாக பாகுபாடுகளுக்கும் ஒடுக்குமுறைகளுக்கும் அடக்குமுறைகளுக்கும் உள்ளாகியிருக்கும் தமிழ்மொழி பேசும் மக்களின் உரிமைகளை உறுதி செய்வதற்கு சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான தீர்வை உருவாக்குதல். இதற்காக இலங்கைக்குள் இவ் இனத்தின் மரபுவழித் தாயகமான வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மற்றும் மலையகம் என்பவற்றின் அரசியல்இ பொருளாதாரம்இ பாதுகாப்புத்துறைகள் சார்ந்த சுயநிர்ணய உரிமையை உறுதிப்படுத்துதல்இ மற்றும் மரபுவழித் தாயகத்திற்கு வெளியே வாழும் புலம்பெயர்


Tel : 0752849261, 0773384637
Email :erosdemocraticfront@hotmail.com
No.15, Vanniyar Road, Kalmunai.

தமிழ்த்தேசிய இன மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதிலும் பாதுகாப்பதிலும் விசேட கவனம் செலுத்துதல்.

(இ) இலங்கை வாழ் ஒவ்வொரு நபரினதும் உயரிய வாழ்க்கைத் தரத்தை உறுதி செய்யும் வகையில் எல்லோருக்கும் சமத்துவத்தை உறுதிசெய்யும் பொருளாதாரத்தைக் கட்டியமைத்தல்.

(ஈ) மக்களின் மீயுயர் இறைமை, ஒருமைப்பாடு, ஐக்கியம் என்பவற்றை உயர்த்திப்பிடித்தல்.

(உ) எல்லாவிதமான மேலாண்மைகளுக்கும் எதிராக நாடுகளினதும், தேசங்களினதும் சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட சர்வதேச ஒழுங்கை ஏற்படுத்துதல்.

(ஊ) இலங்கை வாழ் அனைத்து மக்களுக்குமான கட்சியாக அனைத்து மக்களையும் அரசியல் ரீதியாக அணிதிரட்டல்.

(எ) குறித்த மக்கள் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்காக் செயலூக்கமான அரசியல், வெகுஜன செயற்பாடுகளில் ஈடுபட்டு மக்களை அணிதிரட்டல்.

(ஏ) இக் கட்சி தனியான கட்சியாகவோ அல்லது ஏனைய கட்சிகளுடன் கூட்டிணைந்தோ, முன்னணியாகவோ எல்லாத் தேர்தல்களிலும் போட்டியிடல்.

(ஐ) இக் கட்சி தனியான கட்சியாகவோ ஏனைய கட்சிகளுடன் கூட்டிணைந்தோ நெறிமுறையான வழிகளில் அரசாட்சியை அமைத்தல்.

(ஒ) மேற்கூறப்பட்ட இலக்குகளை எய்துவதற்காக எல்லாத் தேவையான நடவடிக்கைகளையும் முன்னெடுப்பதுடன் எல்லாச் செயற்பாடுகளிலும் ஈடுபடல்.

7. உறுப்புரிமை

(அ) 18 வயது பூர்த்தியடைந்த ஆட்கள் எவரும் இக் கட்சியின் உறுப்புரிமையை பெற்றுக் கொள்ளத் தகுதியுடையவர்களாவர்.

(ஆ) உறுப்புரிமைக்கான விண்ணப்பங்கள் யாவும் பொதுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்ட படிவத்தில் குறித்துரைக்கப்பட்ட வழிமுறைகளுக்கேற்ப எழுத்து மூலம் கட்சியின் வட்டக்குழு, பிரதேசக்குழு, பிராந்தியக்குழு ஊடாக கட்சியின் நிறைவேற்றுச் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(இ) உறுப்புரிமை கோரி செய்யப்படும் விண்ணப்பம் எதனையும் காரணம் எதுவும் காட்டாமல் பொதுக்குழுவானது கட்சியின் நிறைவேற்றுச் செயலாளரினூடாக நிராகரிக்கலாம்.

(ஈ) பொதுக் குழுவினால் உறுப்புரிமைக்கான விண்ணப்பம் ஏற்கப்படுமிடத்து விண்ணப்பதாரி கட்சியின் உறுப்பினராவதுடன் அவரின் பெயர் உறுப்புரிமைப் புத்தகத்தில் முறையாகப் பதிவு செய்யப்பட்டு அவருக்கான உறுப்புரிமை அட்டை வழங்கப்படும்.

(உ) இக் கட்சியின் உறுப்பினர் எவரும் வேறெந்த அரசியல் கட்சியினதும் உறுப்பினராக இருக்க முடியாது.

(ஊ) கட்சியின் விதிகட்கும், முடிவுகட்கும் உடன்பட்டு அவற்றுக்கமைய நடத்தல் வேண்டும்.

(எ) வேறு குழுக்கள் அல்லது வேறு அரசியல் கட்சிகளில் இருந்தவர்கள் அல்லது அரசியல் சார்ந்த வேறு நிறுவனங்களில் இருந்தவர்கள் அல்லது எமது கொள்கைக்கு முரணாக கடந்த காலங்களில் செயல்பட்டவர்கள் அல்லது எமது கொள்கைக்கு முரணான அரசியல் கட்சிகளில் இணைந்து தேர்தல்களில் வேட்பாளராக நிறுத்தப்பட்டவர்கள் எமது கட்சியின் உறுப்புரிமைக்கு விண்ணப்பித்தால் அவ் விண்ணப்பத்தை ஏற்பதா? அல்லது நிராகரிப்பதா? என்பதன் இறுதித் தீர்மானத்தை பொதுக்குழுவே எடுக்கும்.

8. உறுப்பினரின் கடமைகளும், செயற்பாடுகளும்

(அ) கட்சியினதும் அதன் வெகுஜன அமைப்புக்களினதும் செயற்பாடுகளில் பங்குபற்றுவதுடன் கட்சியின் அரசியல் நடவடிக்கையிலும் நாட்டின் அரசியலிலும் ஈடுபடல் வேண்டும்.

(ஆ) கட்சியின் யாப்புக்கும், கொள்கைகளுக்கும்இ வேலைத் திட்டங்களுக்கும், விதிகளுக்கும், நடத்தை ஒழுக்கமுறைகளுக்கும் அமைவாக நடத்தல் வேண்டும்.

(இ) அரசியல் அறிவை வளர்த்துக்கொள்வதற்காக கட்சியின் கொள்கை கோட்பாடுகள் பற்றிய தெளிவை பெற்றிருக்க வேண்டியதுடன் கட்சியின் பிரசுரங்களையும் ஏனைய பிரசாரப் பொருட்களையும் வாங்குவதுடன், பொதுமக்களிடம் விநியோகிக்கவும் வேண்டும்.

(ஈ) கட்சியின் கொள்கைகள், முடிவுகள், வேலைத்திட்டங்களை வகுப்பதிலும் அதனை நடைமுறைப்படுத்துவதிலும் ஈடுபடல் வேண்டும்.

(உ) கட்சிக்கு ஒழுங்காக உறுப்புரிமைப்பணம், அன்பளிப்பு அல்லது உதவிப்பணம் போன்றவற்றை வழங்குவதுடன் கட்சிக்கான நிதி திரட்டலிலும் ஈடுபடல் வேண்டும். உறுப்புரிமை பணத்தை மாதாந்தமோ, அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மாதங்களுக்கு என்கின்ற வகையில் பகுதிக் கொடுப்பனவாகவும் செலுத்தலாம். ஆனால் வருடாந்த மாநாட்டிற்குரிய திகதி அறிவிக்கப்படுவதற்கு முன்பு அவ்வருடத்திற்குரிய அங்கத்துவப் பணத்தையும், உதவிப்பணத்தையும் செலுத்தியிருக்காவிட்டால் அவர் தனது உறுப்புரிமையை இழப்பதுடன் மாநாட்டில் பங்குபற்றுவதற்கான தகுதியையும் இழக்கின்றவராவார்.

(ஊ) கட்சிக்கு புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதுடன் கட்சியை மக்கள் மத்தியில் பலப்படுத்தி மக்களுக்கான அரசியல் தலைமைத்துவத்தை வழங்குதல் வேண்டும்.

(எ) மேற்படி விடயங்களுக்கு மேலாக கட்சி பாரப்படுத்தும் கடமைகளையும் மறுப்பின்றிச் செய்தல் வேண்டும்.

(ஏ) கட்சியைச் சீர்குலைக்கும் நோக்குடன் முரண்பாடுகளை வளர்த்தல்இ புதிய குழுக்களை உருவாக்குதல்இ பிரதேசவாதத்தையோ, மத வேறுபாடுகளையோ தூண்டுதல்இ கட்சியின் தலைமைக்கு ஒத்துழைப்பு வழங்காது செயற்படுதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடாதிருத்தல்.

(ஐ) தனக்கெதிராக கட்சி ஒழுக்காற்று நடவடிக்கைகளை முன்னெடுக்குமாயின் அதற்கான விசாரணைகளில் தனது முழு ஒத்துழைப்பையும் வழங்குதல் வேண்டும்.

9. உறுப்பினரின் உரிமைகள்

(அ) கட்சியுடைய நிறுவனங்களின் கூட்டங்களில் கருத்துக்களை முன்வைக்கவும், விவாதிக்கவும், கலந்துரையாடவும் உரிமை உண்டு.

(ஆ) கட்சிக்கு பிரேரணைகளையும், அறிக்கைகளையும், தீர்மானங்களையும் சமர்ப்பித்தல்.
(இ) கட்சியின் பதவிகளுக்கு தெரிவு செய்தலும், தெரிவு செய்யப்படுதலும்.

(ஈ) தனக்கெதிராக கட்சி ஒழுக்காற்று நடவடிக்கைகளை முன்னெடுக்குமாயின் அதற்கான விசாரணைகளில் தனது பக்க நியாயங்கயையும், நிலைப்பாடுகளையும், கருத்துக்களையும் எடுத்துக் கூறும் உரிமை உண்டு.

(உ) கட்சியின் முடிவிற்கமைய ஜனாதிபதி, பாராளுமன்றம், மாகாணசபை, உள்ளூராட்சி மன்றம் மற்றும் இன்னபிற தேர்தல்களில் பங்குபற்றல்.

(ஊ) கட்சியின் நிலைப்பாட்டிற்கு எதிரான கருத்துக்கள் இருக்குமாயின் அதனைக் கட்சியின் மட்டங்களிலேயே முன்வைத்தலும், அதற்கான தீர்வைப் பெற்றுக்கொள்ளுதலும்.

10. உறுப்புரிமை இழப்பு

(அ) குறித்த வருடத்திற்கான முழு அங்கத்துவப் பணத்தையம், உதவிப்பணத்தையும் வருடாந்த மாநாட்டிற்கான திகதி அறிவிப்பதற்கு முன்னர் செலுத்தி இருக்காதிருத்தல்.

(ஆ) அடுத்தடுத்த கட்சிக் கிளைக் கூட்டங்கள் மூன்றிற்கு வருகைதரத் தவறுதல். இதற்கான நியாயமான காரணத்தை எழுத்துமூலம் அறியத்தரும்பட்சத்தில் அதனைப் பொதுக்குழு ஏற்றுக்கொண்டால் விதிவிலக்கு அளிக்கப்படலாம்.

(இ) தனக்கு வழங்கப்பட்ட பொறுப்புக்களைத் தொடர்ந்தும் செய்யத் தவறுதல்

(ஈ) உறுப்பினருக்குரிய கடமைகளைச் செய்யாது தொடர்ந்தும் உதாசீனம் செய்தல்

(உ) கட்சியின் யாப்பு, தீர்மானங்கள், கொள்கைகள், வேலைத்திட்டங்கள், ஒழுக்காற்று விதிகள் என்பவற்றில் எதனையாவது மீறுதல்.

(ஊ) கட்சிக்குள் பிளவுகளை ஏற்படுத்தும் வகையில் குழுப்பிரிவுகளை ஏற்படுத்தல், அல்லது அத்தகைய குழுப்பிரிவில் உறுப்பினராயிருத்தல்.

(எ) கட்சியை பலவீனப்படுத்தும், சீர்குலைக்கும் அல்லது அழிக்கும் நோக்கில் செயற்படல்.

(ஏ) கட்சிக்கும், அதன் உறுப்பினர்களுக்கும் எதிராக பொய்யான கூற்றுக்களைப் பரப்புதல்.

(ஐ) கட்சிக்கு வெளியே கட்சிக்கு எதிரான கருத்துக்களை முன்வைத்தல்.

(ஒ) கட்சியை சீர்குலைக்கும் நோக்குடன் முரண்பாடுகளை வளர்த்தல்இ புதிய குழுக்களை உருவாக்குதல்இ பிரதேசவாதத்தையோ, மத வேறுபாட்டையோ தூண்டுதல்இ கட்சியின் தலைமைக்கு ஒத்துழைப்பு வழங்காது செயற்படுதல்.

(ஓ) மேற்படி ஒன்று அல்லது பலவற்றை செய்யும் உறுப்பினரின் கட்சி உறுப்புரிமை நீக்கப்பட்டு அவர் கட்சியிலிருந்து வெளியேற்றப்படுவார்.

11. கட்சி உறுப்புரிமையை நீக்கும் நடவடிக்கை முறைமை

ஒருவரின் கட்சி உறுப்புரிமை நீக்கப்பட்டு அவர் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட முன்னர் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(அ) எமது கட்சி உறுப்பினர் ஒருவரிடமிருந்தோ, அல்லது கட்சியின் ஒரு நிறுவன அமைப்பிடமிருந்தோ தமது சொந்த அவதானிப்பின் மூலம் கிடைத்த முறைப்பாட்டின்மீது குறிப்பிட்ட உறுப்பினர் ஒருவர் பிரிவு 7இல் கூறப்பட்ட தகைமையீனங்களுக்கு உள்ளாகும்போதுஇ அவர் கட்சியின் நலன்களுக்கு பாரிய வகையில் பாதிப்பை அல்லது கட்சியின் யாப்பு, நடத்தை ஒழுக்கவிதிகள், தீர்மானங்கள், கொள்கைகள், வேலைத்திட்டங்கள், முடிவுகள் என்பவற்றில் எதையாவது மீறும் வகையில் செயற்பட்டுள்ளார் என்பதைப் பொதுக்குழு உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். அவ்வுறுப்பினரிடம் அவரின் நடத்தைபற்றி விளக்கம் கோரப்பட வேண்டும். விளக்கமளிக்கத் தவறினாலோ திருப்தியற்ற விளக்கமளித்தாலோ பொதுக்குழு அவ்விடயத்தை ஒழுக்காற்றுக்குழுவின் விசாரணைக்காக பாரப்படுத்த வேண்டும்.

(ஆ) சம்பந்தப்பட்ட உறுப்பினருக்கு குற்றப்பத்திரத்தைக் கையளித்து ஒழுக்காற்றுக்குழு அவரை விசாரிக்க வேண்டும்.

(இ) தன்னிடம் பாரப்படுத்தப்பட்ட விடயத்தை ஒழுக்காறுக்குழு விசாரித்த பின்பு விசாரணை அறிக்கையை பொதுக் குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டும.

(ஈ) ஒழுக்காற்றுக்குழு சமர்ப்பித்த அறிக்கையின் அடிப்படையில் குறிப்பிட்ட உறுப்பினரை கட்சியிலிருந்து வெளியேற்றுவதா என்பதை பொதுக் குழு தீர்மானிக்கும்.

(உ) பாதிக்கப்பட்ட உறுப்பினர் மேற்படி முடிவிற்கு எதிரான தனது மேன் முறையீடுகளை கட்சியின் நிறைவேற்றுச் செயலாளரிடம் பாரப்படுத்தலாம். நிறைவேற்றுச் செயலாளர் அதனைப் பொதுக்குழுவிற்கு பாரப்படுத்தி அதன் தீர்மானத்தைப் பெற்று அவ் உறுப்பினருக்கு அறிவிப்பார்.

(ஊ) பொதுக்குழுவின் முடிவே இறுதியானதும் முற்றுமுடிவானதும் ஆகும்.

12. ஒழுக்காற்று நடவடிக்கை

(அ) கட்சியின் பொதுக்குழுவோ அல்லது ஒழுக்காற்றுக்குழுவோ கட்சியின் உறுப்பினர் ஒருவர்மீது ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுக்க முடியும்.

(ஆ) கட்சி உறுப்பினர் ஒருவர்மீது எடுக்கப்படக்கூடிய ஒழுக்காற்று நடவடிக்கைகள்:

(ஐஐ) அவரை எச்சரித்தல்
(ஐஐஐ)நிறுவனத்தில் அவருக்கிருந்த பொறுப்புக்களிலிருந்து அவரை விடுவித்தல்
(ஐஏ) அவர் வகித்த பதவியிலிருந்து அவரை விலக்குதல்
(ஏ) குறிப்பிட்ட காலத்திற்கு பதவிகளை ஏற்க தடைவிதித்தல்
(ஏஐ) உறுப்புரிமையை குறிப்பிட்ட காலத்திற்கு இடைநிறுத்தி வைத்தல்
(ஏஐஐ) கட்சியிலிருந்து வெளியேற்றல்

(இ) கட்சி நிறுவனமொன்றிற்கு எதிராக எடுக்கப்படக்கூடிய ஒழுக்காற்று நடவடிக்கைகள்

(ை) எச்சரிக்கை செய்தல்
(ை) நிறுவனத்தின் குழுவை மறுசீரமைத்தல்
(ைை) நிறுவனத்தின் குழுவைக் கலைத்து அதன் அவசர அலுவல்களைக் கவனிப்பதற்கான புதிய குழுவொன்றை தற்காலிகமாக நிறுவுதல்
(ளை) குறித்த முழு நிறுவனத்தையும் கலைத்து புதிய உறுப்பினா்கள் மூலம் அதனைப் புதுப்பித்தல்

(ஈ) உறுப்பினா் ஒருவா் அல்லது கட்சி நிறுவனம் ஒன்றின் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு முன்னா் உறுப்பினரின்.'.நிறுவனத்தின் நியாயத்தை எடுத்துரைக்க வாய்ப்பளிக்கப்பட வேண்டும்.

13. விலகல்

கட்சியிலிருந்தோ கட்சியினுள் வகிக்கும் அதிகாரபூா்வமான பதவி எதிலுமிருந்தோ விலகவோ கட்சியிலிருந்து ஓய்வு பெறவோ விரும்பும் உறுப்பினா் ஒருவா் தான் விலகவோ ஓய்வு பெறவோ வேண்டுவதை உரிய கிளைக்கோ அல்லது கட்சி நிறுவனத்திற்கோ எழுத்துமூலம் தெரிவிக்க வேண்டும். இவ் விடயம் பொதுக்குழுவிடம் உடனடியாகச் சமா்ப்பிக்கப்படல் வேண்டும். உறுப்பினரின் விலகலையோ, ஓய்வு பெறலையோ பொதுக்குழு ஏற்றதையடுத்து அவ் உறுப்பினர் கட்சியின் உறுப்பினராகவோ அல்லது பதவி வகிப்பவராகவோ இருக்க மாட்டார்.

14. நிறுவனக் கோட்பாடுகள்

(அ) தனியொருவா் அந்தந்த கிளைக்குக் கட்டுப்பட்டவராவ.ார்
(ஆ) சிறுபான்மை பெரும்பான்மைக்கு கட்டுப்படுதல் வேண்டும்
(இ) அடிமட்ட கட்சி நிறுவனம் மேல்மட்ட கட்சி நிறுவனத்திற்கு கீழ்ப்படிவானதாகும்
(ஈ) சகல கட்சி உறுப்பினா்களும், கட்சி நிறுவனங்களும் பொதுக்குழுவிற்கு கீழ்ப்படிவானதாகும்.
(உ) கட்சியின் தேசிய மாநாடே கட்சியின் உயரிய அங்கமாகும்.

15. கட்சி நிறுவனக் கட்டமைப்புக்கள்

இக் கட்சி வட்டக்குழுக்கள்(யுஊ), பிரதேசக்குழுக்கள்(னுஊ), பிராந்தியக்குழுக்கள்(சுஊ), பொதுக்குழு(புஊ), மத்தியகுழு(ஊஊ)இ நிறைவேற்றுக்குழு(நுஊ)இ ஆலோசனைக்குழு(ஊஊ) ஆகிய ஏழு மட்டங்களில் நிறுவன கட்டமைப்புக்களைக் கொண்டிருக்கும். எக்காரணத்தினாலேனும் கட்சியின் எவரது அங்கத்துவமோ அல்லது பதவி வெற்றிடமோ ஏற்படுமாயின் பொதுக்குழுவின் சாதாரண பெரும்பான்மை மூலம் அடுத்துவரும் பொதுக்கூட்டம் அல்லது அவ்வாறான நியமனத்தின் மூலம் தெரிவு செய்யப்படும்வரை அவ்விடத்திற்கு தற்காலிகமாக ஒருவரை நியமிக்கலாம்.

அ. வட்டக் குழுக்கள்(யுஊ)

1) நாட்டின் சகல மாவட்டங்களிலும் பிரதேசக்குழுக்கள் அமைந்திருக்கும் பிரதேசங்களின் கிராம சேவையாளர் பிரிவு அல்லது கிராமத்தை எல்லையாகக்கொண்டு வட்டக்குழுக்கள்(யுஊ) அமைக்கப்படும்

117

2) வட்டக்குழுக்கள்(யுஊ) என்பவை தலைவர், செயலாளர், பொருளாளர் உட்பட 5 அல்லது 7 அல்லது 9 உறுப்பினர்களைக் கொண்டதாக அந்தந்த நிர்வாக ஆளுகைக்குட்பட்ட உறுப்பினர்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

3) உறுப்பினர்கள் அந்தந்த தேர்தல் தொகுதிகளை பிறப்பிடமாக கொண்ட அல்லது நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட சகல உறுப்பினர்களும் அந்தந்த வட்டக் குழுக்களில்(யுஊ) அங்கம் வகிப்பர்.

4) வட்டக்குழுக்கள்(யுஊ) ஆகக் குறைந்தது 2 மாதங்களுக்கு ஒரு தடவையாவது கூட்டப்படல் வேண்டும்.

5) ஒரு வருடம் வட்டக்குழுக்களில்(யுஊ) உறுப்பினராக இருந்தவர்கள் தெரிவுகள் மூலம் அந்தந்த நிர்வாக ஆளுகைக்குட்பட்ட பிரதேசக்குழுவில்(னுஊ) உறுப்பினராக முடியும்

6) இவ் வட்டக்குழுக்கள்(யுஊ) அமைந்திருக்கும் பிரதேசத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பிரதேசக்குழுவை(னுஊ) அப் பிரதேசத்திலுள்ள ஒவ்வொரு வட்டக்குழுக்களினதும்(யுஊ) தலைவர், செயலாளர், பொருளாளர் உட்பட்ட தலா 5 உறுப்பினர்களைக் கொண்டமைந்த உறுப்பினர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

7) அந்தந்த வட்டக்குழுக்களின்(யுஊ) பிரதேசத்திலுள்ள அரசியல், சமூக மற்றும் தாபன நடவடிக்கைகள் யாவும் அந்தந்த வட்டக்குழுக்களின்(யுஊ) செயலாளர் பொறுப்பில் இருக்கும்.

ஆ. பிரதேசக் குழுக்கள்(னுஊ)

1) நாட்டின் சகல மாவட்டங்களிலும் ஒவ்வொரு தேர்தல் தொகுதிகளையும் எல்லையாகக் கொண்டு பிரதேசக் குழுக்கள்(னுஊ) அமைக்கப்படும்

2) பிரதேசக்குழுக்கள்(னுஊ) என்பவை தலைவர், உப தலைவர், செயலாளர், உப செயலாளர், பொருளாளர் உட்பட 7 அல்லது 9 அல்லது 11 உறுப்பினர்களைக் கொண்டதாக அந்தந்த பிரதேசத்தில் வட்டக்குழுவிற்கு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களிலிருந்து அவ் உறுப்பினர்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

3) உறுப்பினர்கள்: அந்தந்த தேர்தல் தொகுதிகளைப் பிறப்பிடமாகக் கொண்ட அல்லது நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட சகல உறுப்பினர்களும் பிரதேச குழுக்களில்(னுஊ) அங்கம் வகிப்பர்.

4) பிரதேசக்குழுக்கள்(னுஊ) ஆகக் குறைந்தது 2 மாதங்களுக்கு ஒரு தடவையாவது கூட்டப்படல் வேண்டும்.

5) ஒரு வருடம் வட்டக்குழுக்களில்(யுஊ) உறுப்பினராக இருந்தவர்கள் தெரிவுகள் மூலம் பிரதேசக்குழு(னுஊ) உறுப்பினராக முடியும்

6) இரண்டு வருடங்கள் பிரதேசக்குழு(னுஊ) உறுப்பினராக இருந்தவர்கள் தெரிவுகள் மூலம் பிராந்தியக்குழு(சஊ) உறுப்பினராக முடியும்.

7) இவ் பிரதேசக்குழு(னுஊ) அமைந்திருக்கும் பிரதேசத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் பிராந்தியக்குழுக்களை(சஊ) இவ் மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேசக்குழுக்களின்(னுஊ)

உறுப்பினர்களுடன், ஒவ்வொரு வட்டக்குழுக்களில்(யுஊ) இருந்து மூன்று உறுப்பினர்களும் இணைந்து தெரிவின் மூலம் பிராந்தியக்குழு(சுஊ) உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

8) அந்தந்த பிரதேசத்திலுள்ள அரசியல், சமூக மற்றும் தாபன நடவடிக்கைகள் யாவும் அந்தந்த பிரதேசக்குழு(னுஊ) செயலாளர் பொறுப்பில் இருக்கும்.

இ. பிராந்தியக் குழுக்கள்(சுஊ)

நாட்டின் சகல மாவட்டங்களிலும் இருக்கும் பிராந்தியக் குழுக்கள்(சுஊ) என்பவை:

1. பிராந்திய பொதுக்குழு(சுபுஊ)
2. பிராந்தியக் குழு(சுஊ) என்பனவாகும்.

பிராந்திய பொதுக்குழு(சுபுஊ)

1) பிராந்திய பொதுக்குழுக்கள்(சுபுஊ) என்பவை தலைவர், உப தலைவா், செயலாளர், உப செயலாளர், பொருளாளர் உட்பட 21 அல்லது 23 அல்லது 25 உறுப்பினர்கள் கொண்டதாக பிரதேசக்குழுக்கள்(னுஊ) மற்றும் வட்டக்குழுக்களின்(யுஊ) உறுப்பினர்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

2) உறுப்பினர்கள்: அந்தந்த தேர்தல் மாவட்டத்தினைப் பிறப்பிடமாகக் கொண்ட அல்லது நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட சகல உறுப்பினர்களும் தெரிவுகள் மூலம் பிராந்திய பொதுக்குழுக்களில்(சுபுஊ)அங்கம் வகிப்பர்.

3) பிராந்திய பொதுக்குழுக்கள்(சுபுஊ) ஆகக் குறைந்தது 2 மாதங்களுக்கு ஒரு தடவையாவது கூட்டப்படல் வேண்டும்.

4) இரண்டு வருடங்கள் பிரதேசக்குழு(னுஊ) உறுப்பினராக இருந்தவர்கள் தெரிவுகள் மூலம் பிராந்திய பொதுக்குழு(சுபுஊ) உறுப்பினராக முடியும்

5) இவ் பிராந்திய பொதுக்குழு(சுபுஊ) அமைந்திருக்கும் மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பிராந்திய பொதுக்குழு(சுபுஊ) இவ் மாவட்டத்திலுள்ள ஒவ்வெரு பிரதேசக்குழு(னுஊ) உறுப்பினர்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

6) அந்தந்த மாவட்டத்திலுள்ள அரசியல், சமூக மற்றும் தாபன நடவடிக்கைகள் யாவும் அந்தந்த பிராந்தியக்குழு(சுஊ) செயலாளர் பொறுப்பில் இருக்கும்.

7) பிராந்திய பொதுக்குழுவில்(சுபுஊ) இருந்து தலைவர், உப தலைவர், செயலாளர், உப செயலாளர், பொருளாளர் ஆகியோர் உட்பட 7 அல்லது 9 உறுப்பினர்கள் பிராந்தியக்குழு(சுஊ) உறுப்பினர்களாக பிராந்திய பொதுக்குழுவால்(சுபுஊ) தெரிவு செய்யப்படுவார்கள்.

8) அந்தந்த மாவட்டத்திலுள்ள அரசியல், சமூக மற்றும் தாபன நடவடிக்கைகள் யாவும் அந்தந்த பிராந்தியக்குழு(சுஊ) செயலாளர்கள் பொறுப்பில் இருக்கும்.

பிராந்தியக்குழு(சுஊ)

1) நாட்டின் சகல மாவட்டங்களிலும் இவ் பிராந்தியக்குழு(சுஊ) இருக்கும். பிராந்திய பொதுக்குழுவில்(சுபுஊ) இருந்து தலைவர், உப தலைவர், செயலாளர், உப செயலாளர்,

பொருளாளர் ஆகியோர் உட்பட 7 அல்லது 9 உறுப்பினர்கள் பிராந்தியக்குழு(சுஊ) உறுப்பினர்களாக பிராந்திய பொதுக்குழுவால்(சுபுஊ) தெரிவு செய்யப்பட்டு அந்தந்த பிராந்தியத்தின் பிராந்தியக் குழுவாகச்(சுஊ) செயற்படுவர்.

2) இவ் பிராந்தியக் குழுவிற்கு(சுஊ) பிராந்திய பொதுக்குழுவின்(சுபுஊ) அனுமதியில்லாமலேயே கட்சியின் அரசியல் சம்பந்தப்பட்ட அவசர, அவசிய முடிவுகள் எடுக்கும் அதிகாரம் உண்டு.

3) மாவட்டத்திற்கான தலைமை, இக்குழுவின்(சுஊ) கூட்டுப்பொறுப்பில் இருக்கும்.

4) பிராந்தியக்குழு(சுஊ) மாதம் ஒரு தடவையாவது கூட்டப்படல் வேண்டும்.

5) அந்தந்த மாவட்டத்திலுள்ள அரசியல், சமூக மற்றும் தாபன நடவடிக்கைகள் யாவும் அந்தந்த பிராந்தியக்குழு(சுஊ) செயலாளர் பொறுப்பில் இருக்கும்.

மேற்படி குழுக்களின் தெரிவுகள் யாவும் கட்சியின் தேசிய மாநாட்டிற்கு முன்பு மேற்கொள்ளப்பட வேண்டும்.

பிராந்தியக் குழுக்கள் கீழ்குறிப்பிடப்படுகின்ற உப குழுக்களை நிறுவி கட்சியின் வளர்ச்சிக்கு உதவுவதோடு மக்கள் நலன் கருதிய சேவைகளையும் மேற்கொள்ளும்.

கட்சியின் உப குழுக்கள்.

தொழிற் சங்கம்இ இளைஞர் அமைப்புஇ மாதர் அமைப்புஇ மக்கள் சமாதானப் பேரவை.

இன்றைய தேசிய, சர்வதேச நிலைமைகளைக் கருத்திற்கொண்டு மேற் கண்ட அனைத்து மக்கட் பகுதியினர் மத்தியில் எங்கெங்கு பாதுகாப்பு இருக்கின்றதோ அங்கெல்லாம் கட்சி பூரண கவனம் செலுத்தி அந்தந்தப் பகுதியினரை அந்தந்த செயற்பாடுகளின் நோக்கங்களுக்காக ஒன்று திரட்டி தாபன ரீதியாக இயங்குவது மிக மிக முக்கியம் என கட்சியின் இந்த யாப்பு வலியுறுத்துகின்றது.

ஈ. மத்தியகுழு(ஊஊ)

1) தலைவர்இ நிறைவேற்று பொதுச் செயலாளர், பிரதி பொதுச் செயலாளர், பொருளாளர், பதவிவழி நிறைவேற்று அதிகாரம் உடையவர்களாகவும் இருக்க மற்றும் சகல பிராந்திய செயலாளர்களும் மத்திய குழுவில் அங்கம் வகிப்பர்.

2) கூட்டங்களுக்கான கோரம்: பெரும்பான்மை உறுப்பினர்கள் கூட்டத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.

3) சாதாரண, அவசர மத்தியகுழுக் கூட்டங்களுக்கு முறையே 3 நாட்கள் முன்னறிவித்தல் கொடுக்கப்பட வேண்டும்.

4) ஒவ்வொரு பிராந்திய செயலாளரும் தாங்கள் கூட்டங்களுக்கு சமுகமளிக்க முடியாத நிலை ஏற்படின் அந்தந்த பிராந்திய செயலாளரின் பிரதிநிதியாக ஒருவர் கட்டாயம் மத்தியக்குழு கூட்டத்தில் இடம்பெற வேண்டும்.

5) மத்தியகுழு சகல பிராந்தியங்களினதும் அரசியல், வெகுஜன இன்னும் பிற வேலைகளை நெறிப்படுத்துவதுடன் அவற்றுக்கு பொறுப்பாக இருந்து கட்சி தொடர்பான முடிவுகளை எடுக்கும் அதிகாரமும் உரிமையும் மத்திய குழுவிற்கு இருக்கிறது.

6) இவ் மத்தியகுழுவிற்கு(ஊஊ) பிராந்தியங்கள் தொடர்பிலான கட்சியின் சகல அவசர அவசிய முடிவுகள் எடுக்கும் அதிகாரம் உண்டு.

7) இவ் மத்தியகுழு(ஊஊ) பொதுக்குழுவின் தீர்மானங்களை வலுவாக நிறைவேற்றுவதற்கு வழிகாட்டும் ஒரு விசேட அமைப்பாகும்.

8) பிராந்தியங்கள் தொடர்பான தீர்மானங்களை எடுக்கவேண்டிய நேரங்களில் மாத்திரம் மத்தியகுழு கூடும்.

உ. பொதுக்குழு(புஊ)

(i) எமது அமைப்பு செயற்படுகின்ற ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் அதாவது வடக்கு, கிழக்கு, மலையகம் உள்ளிட்ட அந்தந்த மாவட்டத்தில் குறைந்தது 3 வருடங்களாக வசித்துக்கொண்டிருக்கும் தலா 3 பொதுக்குழு உறுப்பினர்களையும் மேலதிகமாக 5 துறைசார்ந்த பொதுக்குழு உறுப்பினர்களையும் தேசியமாநாடு தெரிவுசெய்யும். மாநாட்டில் தெரிவு செய்யப்படும் கட்சி உத்தியோகத்தர்களும் ஆலோசனைக்குழு உறுப்பினர்களும் பதவிவழியாக பொதுக்குழு உறுப்பினர்களாக பொதுக்குழுவில் இடம் பெறுவர்.

(ii) இரண்டு மாநாட்டிற்கு இடைப்பட்ட காலத்தில் பொதுக்குழுவே கட்சியின் அதியுயர் அமைப்பாகச் செயற்படும்.

(iii) மாநாடு கட்சியின் தலைவர்இ நிறைவேற்று பொதுச் செயலாளர், பிரதி பொதுச் செயலாளர், பொருளாளர், நிறைவேற்றுக்குழு(நுஊ) உறுப்பினர்கள் ஆகிய கட்சியின் உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்யும். இரண்டு மாநாட்டிற்கு இடைப்பட்ட காலத்தில் தேவையேற்படின் பொதுக்குழு இங்கு குறிப்பிடப்படும் பதவிப் பொறுப்புக்களுக்கு புறம்பாக புதிய பதவிப் பொறுப்புக்களையும் உருவாக்கலாம்.

(iv) பொதுக்குழு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூட்டப்பட வேண்டும்.

(v) பொதுக்குழு கட்சியினது அரசியல், வெகுஜன இன்னும் பிற வேலைகளை நெறிப்படுத்துவதுடன் அவற்றுக்குப் பொறுப்பாக இருந்து கட்சி தொடர்பான முடிவுகளை எடுக்கும் அதிகாரமும் உரிமையும் பொதுக் குழுவிற்கு இருக்கிறது.

(vi) கட்சியினதும் அதன் அலுவலகங்களினதும் நிர்வாகத்திற்கு பொதுக்குழுவே பொறுப்பாகும்.

(vii) இரண்டு மாநாட்டிற்கு இடையில் பொதுக்குழுவில் ஏற்படும் வெற்றிடங்கள் மற்றும் பதவிவழிசார் உத்தியோகத்தர்களில் ஏற்படும் வெற்றிடங்களை பொதுக்குழு நிரப்பும். சாதாரண பொதுக்குழு உறுப்பினர்களின் வெற்றிடத்தை நிரப்புவதற்கு பொதுக்குழுவிற்கு வெளியிலிருந்து புதியவர்களை தெரிவு செய்யலாம். ஆனால் உத்தியோக வெற்றிடங்களை மாநாட்டில் தெரிவு செய்யப்பட்ட ஏனைய உத்தியோகத்தர்கள், பொதுக்குழு உறுப்பினர்களிலிருந்தே தெரிவு செய்ய வேண்டும். இவ்வாறு வெற்றிடங்களை நிரப்புவதற்காக தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை பொதுக்குழு உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் மூன்றில் ஒன்றுக்கு மேற்படலாகாது. அவ்வாறான நிலைமை ஏற்படுமாயின் மாநாட்டின் மூலமே தீர்வு காணப்பட வேண்டும்.

(viii) நிறைவேற்று பொதுச் செயலாளர் பொதுக்குழுக் கூட்டங்களின் காலம், இடம், நிகழ்ச்சி நிரல் போன்றவற்றை பொதுக்குழு உறுப்பினர்களுக்கு அறிவிப்பார். நிறைவேற்று பொதுச் செயலாளர் பொதுக்குழு கூட்டத்தை கூட்டத்தவறின் பொதுக்குழு உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்கிற்கு குறையாதோர் பொதுக்குழு கூட்டத்தை கூட்டலாம்.

(ix) குறிப்பிட்ட தேவைகளுக்காக பொதுக்குழு துணைக்குழுக்களை நியமிக்கலாம். இக் குழுக்கள் குறிப்பிட்ட அந்தக் காலத்திற்கு மட்டுமே இயங்கும்.

(x) பொதுக்குழு உறுப்பினர்கள் அல்லாத கட்சி உறுப்பினர்களை பொதுக்குழு தனது கூட்டங்களுக்கு அழைக்கலாம். அவ்வாறு அழைக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு பொதுக்குழுவின் கலந்தாலோசனைகளில் பங்குபற்ற உரிமை உண்டு. எனினும் வாக்களிப்பதற்கு உரிமை இல்லை.

(xi) பொதுக்குழு கட்சியின் யாப்பு, கொள்கை, முடிவுகளுக்கு முரணாக செயற்படுவதாகக் காணப்படுமிடத்து கட்சியின் பெரும்பான்மையை பிரதிநிதித்துவப்படுத்தும் வட்டக்குழுக்கள், பிரதேச மற்றும் பிராந்திய மட்ட குழுக்கள் கருத்தறியும் கூட்டத்திற்கு பொதுக்குழுவிடம் அழைப்பு விடுக்கலாம். பொதுக்குழு அவ்வாறான கூட்டமொன்றை கட்டாயம் கூட்ட வேண்டும். தவறுமாயின் பொரும்பான்மையை பிரதிநிதித்துவப்படுத்தும் மேற்படி குழுக்கள் இணைந்து கருத்தறியும் கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கலாம்.

(xii) பொதுக்குழு கட்சி யாப்பிற்கு அமைவாக உறுப்பினர்களுக்கான ஒழுக்க விதிகளை உருவாக்கலாம்.

(xiii) ஒழுக்காற்று குழுவின் பரிந்துரை தேவைப்படுமிடத்து அவ்விடயங்களை அதனிடம் பாரப்படுத்தலாம்.

(xiv) பொதுக்குழு உறுப்பினர்கள் கட்சி நிறுவனங்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுக்கலாம்.

(xv) கட்சியின் எந்தவொரு உறுப்பினரதும் உறுப்புரிமையை ஏற்கவோ, மறுக்கவோ, நீக்கவோ, இடைநிறுத்தவோ பொதுக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

(xvi) கட்சி நிறுவனங்களை அமைக்கவும், கலைக்கவும் அவற்றின் அதிகார வரையறைகளைத் தீர்மானிக்கவும் பொதுக்விற்கு அதிகாரம் உண்டு.

(xvii) கட்சியின் சகல நிறுவனச் செயலாளர்களின் தெரிவை ஏற்கவோ, நிராகரிக்கவோ பொதுக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

(xviii) கட்சியின் முழு நேர ஊழியர்களை நியமிக்கவும், விலக்கவும், அவர்களின் உதவித் தொகையை தீர்மானிக்கவும் பொதுக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

(xix) அடுத்த மாநாடு வரையான காலத்தில் ஒழுக்காற்று விடயங்கள் அனைத்திலும் இறுதித் தீர்ப்பு வழங்க பொதுக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

(xx) வேறு குழுக்கள் அல்லது வேறு அரசியல் கட்சிகளில் இருந்தவர்கள் அல்லது அரசியல் சார்ந்த வேறு நிறுவனங்களில் இருந்தவர்கள் அல்லது எமது கொள்கைக்கு முரணாக கடந்த காலங்களில் செயற்பட்டவர்கள் எமது கட்சிக்குள் உள்வாங்கப்படுவார்கள். அவ்வாறு எமது கட்சியில் இணைந்து கொள்பவர்கள் எமது பொதுக்குழுவின் அங்கீகாரத்துடன் அந்தந்த வட்டக்குழுக்களின்(யுஊ) ஊடாக பிரதேசக்குழுவில் குறைந்தது இரண்டு வருடங்கள் செயற்பட்ட பின்னர் பிராந்தியக் குழுவில் இடம்

பெறலாம். பிராந்தியக் குழுவில் குறைந்தது இரண்டு வருடங்கள் செயற்பட்ட பின்னர் பொதுக்குழுவின் அங்கீகாரத்துடன் பொதுக்குழுவில் இடம்பெறலாம்.

(xxi) பொதுக்குழுவானது தேசிய மாநாட்டை கூட்டும் வரையும் காத்திராமல் பொதுக்குழுவை கூட்டி யாப்பில் மாற்றத்தை செய்ய முடியும். இம்மாற்றம் அடுத்த தேசிய மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

(xxii) யாப்பில் அவசர, அவசிய மாற்றங்களைச் செய்யும் பொழுது உத்தியோகத்தர்கள்இ ஆலோசனைக்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து பொதுக் குழுவாகச் செயற்படுவர்.

(xxiii) பொதுக்குழுவால் குறைந்தது மூன்று பேர் கொண்ட ஆலோசனைக்குழு நியமனம் செய்யப்படும். பொதுக்குழுவின் சகல தீர்மானங்களும் இந்த ஆலோசனைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அதன் ஆலோசனையை பெற்று அதை பொதுக்குழு பரிசீலித்து அங்கீகரித்த பின்னர் அது செயல்வடிவம் பெறும். ஆலோசனைக் குழுவும் பொதுக்குழுவிற்கு தனது ஆலோசனைகளை வழங்கும்.

ஊ. நிறைவேற்றுக்குழு(நுஊ)

1) தலைவர்இ நிறைவேற்று பொதுச் செயலாளர், பிரதி பொதுச் செயலாளர், பொருளாளர் என்போர் நிறைவேற்றுக் குழுவில் பதவிவழி நிறைவேற்று அதிகாரம் உடையவர்களாக இருப்பார்கள். ஏனைய பிற நிறைவேற்றுக்குழு உறுப்பினர்களை மாநாடு அல்லது பொதுக்குழு தெரிவு செய்யும். இத் தெரிவுகள் பிரதேசவாரி அடிப்படையில் இல்லாமல் துறைசார்ந்த நிபுணத்துவ அறிவுஇ துறைசார்ந்த கல்வியறிவுஇ துறைசார்ந்த அனுபவம் போன்றவற்றுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வெளியீட்டுத்துறைஇ பொருளாதாரத் திட்டங்கள்இ சர்வதேச தொடர்புகள்இ கொள்கைத் திட்டமிடல் மற்றும் ஆலோசனைகள்இ சட்ட ஆலோசனைகள் போன்ற தேவையான பொறுப்புக்களுக்கு தெரிவு செய்யும். இத்தகையவர்கள் பொதுக் குழுவில் உறுப்பினர்களாக இருந்திருக்க வேண்டும். நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களின் ஆகக் கூடிய எண்ணிக்கை ஒன்பது ஆக இருக்க வேண்டும்.
2) பொருளாளர் நிறைவேற்றுக்குழு கூட்டங்களுக்கு கலந்துகொள்ள முடியாதநிலையில் அவரின் பிரதிநிதி ஒருவர் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும்.
3) இக் குழு இரண்டு பொதுக்குழு கூட்டங்களுக்குட்பட்ட காலத்தில் கட்சி அரசியல் சம்பந்தப்பட்ட அவசர, அவசிய முடிவுகள் எடுக்கும் அதிகாரம் உண்டு.
4) கட்சியின் சகல அவசர தீர்மானங்களும், செயற்பாடுகளும் பெரும்பான்மையான நிறைவேற்றுக்குழு உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட வேண்டும்.
5) நிறைவேற்றுக்குழு இரண்டு பொதுக்குழு கூட்டங்களுக்கிடையில் கட்சியின் பிரதான அதிகாரமுடைய அமைப்பாகும்.
6) நிறைவேற்றுக்குழு மாதத்திற்கு ஒரு முறையாவது கூட்டப்படல் வேண்டும்.
7) நிறைவேற்றுக்குழுவில் தமிழ் பேசும் மக்களின் மரபுவழித் தாயகமான வடக்குஇ கிழக்குஇ மலையகத்தின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்த குறைந்தது தலா ஒரு பிரதிநிதியாவது இருப்பது கட்டாயமாகப் பேணப்பட வேண்டும்.

எ. ஒழுக்காற்றுகுழு(நுஊ)

1) ஒழுக்காற்றுக்குழு ஐந்து உறுப்பினர்களைக் கொண்டிருக்கும். கட்சியிலிருந்து ஓய்வு பெற்ற உறுப்பினர்கள் அல்லது கட்சிக்கு வெளியிலிருக்கும் புலமைசார் நிபுணர்கள் மூவரும் பொதுக் குழுவில் இடம் பெறாத வேறு இருவரும் மாநாட்டில் தெரிவு செய்யப்படுவார்கள்.

2) இவ் ஒழுக்காற்றுக்குழு(னுஊ) பொதுக்குழு பாரப்படுத்தும் அனைத்து ஒழுக்காற்று விடயங்களையும் விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்கும். பொதுக் குழுவால் வேண்டப்படும் பரிந்துரைகளையும் இக் குழு வழங்கும்.

3) ஒழுக்காற்றுக் குழுவின் முடிவுகளுக்கு எதிரான மேன் முறையீடுகள் இருப்பின் அதனை நிறைவேற்று பொதுச் செயலாளருக்கூடாக பொதுக் குழுவிற்கு முறையிடலாம்.

4) ஒழுக்காற்று குழுவின் முடிவுகளையும், பரிந்துரைகளையும் பொதுக்குழு ஏற்கலாம் அல்லது நிராகரிக்கலாம். ஆனால் பொதுக் குழுவின் தீர்மானமே இறுதியானதும் முடிவானதும் ஆகும்.

ஏ. நம்பிக்கைப் பொறுப்புக்குழு

கட்சியின் அசையும் அல்லது அசையாச் சொத்துக்களுக்கு அதாவது கொள்வனவு, விற்பனவு மற்றும் பரிபாலனத்திற்கு நம்பிக்கைப் பொறுப்புக்குழு பொறுப்பானதாகும். பொதுக் குழுவிற்கு பொறுப்புள்ளதாக இக்குழு இயங்கும். அசையும் அசையாத ஆதனங்கள் தொடர்பான ஆவணங்களில் இக்குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் கைச்சாத்திட வேண்டும். நம்பிக்கைப் பொறுப்புக் குழுவில் நிறைவேற்று பொதுச் செயலாளர், பிரதி பொதுச் செயலாளர்இ பொருளாளர் மற்றும் பொதுக்குழுவில் இடம்பெறாத மாநாட்டில் தெரிவு செய்யப்படும் கட்சியின் இரண்டு உறுப்பினர்கள் அடங்கலாக ஐந்து பேர் இருப்பர். இக்குழுவின் கடமைகள், உரிமைகள், அதிகாரங்கள் என்பவற்றை பொதுக்குழு தீர்மானிக்கும்.

16. கட்சியின் தேசிய மாநாடு

1) கட்சியின் தேசிய மாநாடு கட்சியின் முழு இலங்கைக்குமான அதி உயர் அமைப்பாகும். இது கட்சியின் கருத்தியல், அரசியல், வேலைத் திட்டங்கள் மற்றும் நிறுவனம் சம்பந்தமான அனைத்து விடயங்களையும் தீர்மானிக்கும்.

2) தேசிய மாநாடு வருடாந்தம் கூட்டப்படல் வேண்டும். அது நிகழவுள்ள காலத்திற்கு முன்பும் கூட்டலாம் அல்லது பிற்போடலாம்.

3) கட்சியின் மொத்த உறுப்பினர்ளில் 50 சதவீதமானோரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வட்டக்குழுக்கள்(யுஊ), பிரதேசக்குழுக்கள்(னுஊ)இ பிராந்தியக்குழுக்களின்(சுஊ) வேண்டுகோளுக்கிணங்க பொதுக்குழு கட்சி மாநாட்டைக் கூட்டலாம்.

4) வட்டக்குழுக்கள்(யுஊ), பிரதேசக்குழுக்கள்(னுஊ), பிராந்தியக்குழுக்களிலிருந்து(சுஊ) மாநாட்டிற்கு பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவர்.

5) கட்சியின் மாநாட்டு பிரதிநிதிகளின் பிரதிநிதித்துவத்தின் எண்ணிக்கை தனித்தனியே வட்டக்குழுக்கள்(யுஊ), பிரதேசக்குழுக்கள்(னுஊ), பிராந்தியக்குழுக்களின்(சுஊ) கட்சி விகிதாசார வலிமையைக் கருத்திற்கொண்டு பொதுக்குழுவால் முடிவு செய்யப்படும்.

110

6) பொதுக்குழு உறுப்பினர்கள் மாநாட்டிற்கு பதவிவழிப் பிரதிநிதிகளாவர்.

7) வட்டக்குழுக்கள்(யுஊ), பிரதேசக் குழுக்கள்(னுஊ)இ பிராந்திய பொதுக்குழுக்கள்(சுபுஊ) ஆகியவற்றிலிருந்து தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள் தேசிய மாநாட்டில் கலந்துகொள்வர்.

8) தேசிய மாநாடு கட்சியின் உத்தியோகத்தர்கள்இ நிறைவேற்றுக்குழுஇ பொதுக்குழு ஆலோசனைக்குழு போன்ற உறுப்பினர்களை தெரிவு செய்யும்.

(ஆ) கட்சி மாநாட்டின் கடமைகள்

(i) கட்சியின் வேலைத்திட்டம், யாப்பு இன்னும் பிற ஆவணங்களை சமர்ப்பித்தல், மாற்றுதல், புனரமைத்தல், திருத்துதல்.

(ii) கட்சியின் அரசியல், நிறுவன, நிதி அறிக்கைகளை ஆராய்ந்து கலந்துரையாடி ஏற்றுக்கொள்ளல்.

(iii) யதார்த்த நிலைமைகளுக்கு ஏற்ப கட்சியின் மார்க்கங்களைத் தீர்மானித்தல்.

(iv) கட்சியின் உத்தியோகத்தர்களையும் ஏனைய பொதுக்குழு உறுப்பினர்களையும், நிறைவேற்றுக்குழு(நுஊ) உறுப்பினர்களையும் மற்றும் ஒழுக்காற்றுக்குழு உறுப்பினர்களையும் தெரிவு செய்தல்.

(v) மாநாட்டிற்குரிய நிகழ்ச்சி நிரலையும் செயல்முறையையும் முடிவு செய்தல்.

(vi) மாநாட்டு தலைமைக்குழுவை தெரிவு செய்தல்.

(vii) மாநாட்டில் சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகள், ஆலோசனைகள், பிரச்சனைகள் மற்றும் விடயங்களை கவனத்தில் எடுத்து முடிவு காணல்.

(viii) உறுப்பினர்கள் செலுத்த வேண்டிய உறுப்புரிமைக் கட்டணத்தையும், அன்பளிப்புத் தொகையையும் தீர்மானித்தல்.

17. கட்சி உத்தியோகத்தர்கள்

தலைவர்இ நிறைவேற்று பொதுச் செயலாளர், பிரதி பொதுச் செயலாளர்இ பொருளாளர், உதவிப் பொருளாளரர்இ நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள் என்போர் கட்சியின் உத்தியோகத்தர்களாவர்.

(அ) தலைவர்:

கட்சியின் பொதுக்குழுவால் தலைவர் தெரிவு செய்யப்பட்டு அத் தலைவரால் கட்சி பிரதிநிதித்துவப் படுத்தப்படும்.

(ஆ) நிறைவேற்று பொதுச் செயலாளர்

(i) கட்சியின் நிறுவனங்களின் கூட்டங்களில் பங்குபற்றும் உரிமையுடன் நிர்வாகங்களுக்கும் பொறுப்பாவார்.

(ii) கட்சியின் சார்பில் பேசவும், அறிக்கைகளை விடுக்கவும் உரிமை உண்டு.

(iii) தேர்தல் சட்டங்களின் கீழும், ஏனைய சட்டங்களின் கீழும் அரசியல் கட்சியொன்றின் நிறைவேற்றுச் செயலாளர் என்ற ரீதியில் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளுக்கு பொறுப்பாவார்.

(iv) நிறைவேற்று பொதுச் செயலாளர் கட்சியின் தலைமை நிர்வாகி ஆவார். பொதுக்குழு, நிறைவேற்றுக்குழு என்பவற்றின் தலைமை ஆவதுடன் அவற்றின் கூட்டங்களுக்கும் தலைமை வகிப்பார். எமது கட்சியின் நிறுவனக் கூட்டங்களில் கலந்து கொள்ளும் உரிமையும் இவருக்கு உண்டு.

(v) கட்சியின் சகல நிறுவனங்களுக்கும் தேசிய, சர்வதேச விவகாரங்களுக்கும் நிறைவேற்று பொதுச் செயலாளர் பொறுப்பாவதுடன் கட்சியின் சார்பில் பேசவும், அறிக்கை விடவும் அவருக்கு அதிகாரமும், உரிமையும் உண்டு.

(vi) கட்சியினதும் கட்சி சார்பான ஆவணங்களிலும் ஒப்பமிட நிறைவேற்று பொதுச் செயலாளருக்கு உரிமையுண்டு. கட்சியினுடனான கொடுக்கல், வாங்கல்கள், சொத்து வாங்குதல், விற்றல் போன்றவற்றுக்கு பொறுப்பாக இருப்பதுடன் அது தொடர்பாக பொதுக்குழுவின் அனுமதியுடன் ஆவணங்களில் கையொப்பமிடும் அதிகாரமும் நிறைவேற்று பொதுச் செயலாளருக்கு உண்டு.

(vii) இவற்றைத் தவிர அவ்வப்போது நிறைவேற்றுச் பொதுச் செயலாளரின் அதிகாரங்களையும் கடமைகளையும் உரிமைகளையும் பொதுக்குழு தீர்மானிக்கும்.

(இ) பிரதி பொதுச் செயலாளர்

1) இவர் அரசியல், சமூக, பொருளாதார, கலை, கலாச்சார, பண்பாட்டு உறுப்பினர்களின் பாதுகாப்புஇ மற்றும் திட்டமிடலுக்கு பொறுப்பாக இருப்பதுடன் கட்சியின் தேசிய அரசியல், சர்வதேச அரசியல் மற்றும் தொடர்புகள் என்பவற்றுடன் தாபன கொள்கைகள், வேலைத் திட்டங்களையும் ஒருங்கிணைப்பார்.

2) நிறைவேற்று பொதுச் செயலாளர் இல்லாதவிடத்து பொதுக் குழுவின் பணிப்பிற்கிணங்க நிறைவேற்று பொதுச் செயலாளருக்குப் பதிலாக பதில் கடமையாற்றும் உரிமை இவருக்கு எண்டு. அத்துடன் இவர் நிறைவேற்று பொதுச் செயலாளருக்கு உதவியாக கடமையாற்றுவார்.

(ஈ) பொருளாளர்

1) இவர் நிதி தொடர்பான நடவடிக்கைகளுக்கு பொதுக் குழுவின் வழிகாட்டலின் கீழ் கட்சியின் நிதியை முகாமைப்படுத்தும் பொறுப்பாளராக இருப்பார்.

2) கட்சி நிதியின் வங்கிக்கணக்கு, நிறைவேற்றுச் செயலாளர், பிரதிச் செயலாளர்இ பொருளாளர் ஆகியோர் பொறுப்பில் இருக்கும், காசோலைகளுக்கு மேற்கண்ட மூவரில் எவராயினும் இருவர் கையெழுத்திடுவர்.

3) நிதி பற்றிய கணக்குப் பரிசீலனை மாதமொருமுறை நிறைவேற்றுக் குழுவினால் மேற்கொள்ளப்பட்டு பொதுக் குழுவின் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்டு பொதுக் குழுவின் அங்கீகாரத்தின் பின்னர் ஏற்றுக்கொள்ளப்படும்.

(உ) உதவிப் பொருளாளர்

உதவிப் பொருளாளர் ஒருவர் பொருளாளருக்கு உதவியாக செயற்படுவார்.

18 நிதி

(அ) பொதுக்குழு சார்பில் கட்சி நிதிக்கும், சொத்துக்களுக்கும் நிறைவேற்று பொதுச் செயலாளரும்இ பிரதி பொதுச் செயலாளரும்இ பொருளாளரும் பொறுப்பாவர். பொதுக்குழு வருடாந்த வரவு செலவு திட்டத்தை வரைந்து அதற்குரிய நிதியையும் ஒதுக்கும். இதனடிப்படையில் செயற்பாடுகளைப் பொறுத்து மாவட்டங்களுக்கு நிதி பரவலாக்கப்படும்.

(ஆ) வரவு செலவு திட்டம், மற்றும் கணக்காய்வு நிதி அறிக்கைகள் மாநாட்டில் அங்கிகரிக்கப்பட வேண்டும்.

(இ) கட்சியின் பொருளாளர் கட்சி நிதியை முகாமைப்படுத்த பொறுப்புடையவராயிருப்பார். கணக்காய்வு அறிக்கையை தயாரிக்க பொருளாளர் பொறுப்புடையவராவார். அவ்வறிக்கை கணக்காய்வாளரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை நடைபெறுகின்ற பொதுக்குழு கூட்டத்தில் நிதி அறிக்கை சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(ஈ) கட்சி நிதியானது வங்கிக் கணக்குகள் மூலம் நிர்வகிக்கப்படும். வங்கிக் கணக்குகளை நிறைவேற்றுச் செயலாளரும்இ பிரதிச் செயலாளரும்இ பொருளாளரும் இயக்குவர். வங்கிக் கணக்குகளை வைத்திருக்க வேண்டிய வங்கிகளை பொதுக் குழுவே தீர்மானிக்கும்.

(உ) கட்சி உறுப்பினர்களின் உறுப்புரிமைப் பணம், நன்கொடைகள், நலன் விரும்புவோரினதும், நிறுவனங்களினதும் நன்கொடைகள், பகிரங்க நிதித்திரட்டல் நிகழ்ச்சிகள், பொது மக்களின் பங்களிப்பு போன்றவற்றின் மூலம் கட்சிநிதி அமைக்கப்படும்.

(ஊ) கட்சியின் சகல நிறுவனங்களினது நிதியும், வங்கிக் கணக்குகளும் சம்பந்தப்பட்ட குழுவின் செயலாளராலும், பொருளாளராலும் பொதுக் குழுவின் வழிகாட்டலின் கீழ் இயக்கப்படும். இக் கணக்குகள் அரச நிதிப் பிரமாணங்களில் குறிப்பிடுகின்ற விதி முறைகளுக்கமைவாகப் பேணப்படுவதுடன் நிதிப் பிரமாணங்களுக்கு ஏற்ப வரவு செலவுக்கான ஆவணங்களும் பேணப்படல் வேண்டும்.

(எ) இரண்டு கணக்காய்வாளர்களால் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும்.

19 நிறைவெண்

கட்சியின் அனைத்து நிறுவனங்களினதும் அலுவல்களை நடத்தவும் அவற்றைச் செல்லுபடியாக்கவும் அவ்வவ் நிறுவனங்களின் ஐம்பது சதவீதமானோருக்கு குறைவில்லாதோர் கூட்டத்திற்கு சமுகமளித்திருக்க வேண்டும்.

20 தீர்மானங்கள்

ஏகமனதாக முடிவுகளை எட்டுவதற்கு இயலாதபோது கட்சியின் தேசிய மாநாடு மற்றும் அனைத்து கட்சிநிறுவனங்களும் ஏதாவதொரு முடிவை எடுக்க, தீர்மானத்தை நிறைவேற்ற அம்மாநாட்டின் அல்லது நிறுவனத்தின் கூட்டங்களில் நிறைவெண்ணுக்கு குறையாமல் கலந்து கொண்டவர்களில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடனேயே முடிவுகளை எடுக்க வேண்டும். எடுக்கப்பட்ட முடிவுகள் பதியப்பட்ட எல்லாப் பக்கங்களின் அடியிலும் அந்தக் காலகட்ட மாநாட்டில் தெரிவு செய்யப்படும் தலைவர்இ நிறைவேற்று பொதுச் செயலாளர்இ பிரதிபொதுச் செயலாளர் ஆகியோர்களின் கையொப்பம் இருத்தல் வேண்டும். இத்துடன் இந்த யாப்பின் பதினாறு பக்கங்களும் முற்றுப் பெறுகின்றன.

……………………..
தலைவர்

……………………..
செயலாளர்

**Mr.R. Sriraja Rajendra**
General Secretary
Eros Democratic Front